கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 57 இதழ் : 03 ஜூன் 2022 விலை ரூ.25/-



அறிய
வைத்திருக்கிறார்
அருந்தமிழ் ஆற்றலை!
– ம.ரா.

# உள்ளடக்கம்


கட்டுரை

| | |
|---|---|
| மு. இராமசுவாமி | 06 |
| கே.எஸ்.சுதாகர் | 50 |
| ஈசு | 56 |

நூல் விமர்சனம்

| | |
|---|---|
| தேவரசிகன் | 23 |
| கே.எஸ்.சுதாகர் | 50 |

சிறுகதை

| | |
|---|---|
| வாசுதேவன் அருணாசலம் | 15 |
| பா.ஆசைத்தம்பி | 32 |
| கவிஜி | 42 |
| சுந்தர் ஜெயராஜ் | 52 |
| அகராதி | 59 |
| ப. தனஞ்ஜெயன் | 65 |

| | |
|---|---|
| குறுநாவல் போட்டி | 14 |

கவிதை

| | |
|---|---|
| ஆர். வத்ஸலா | 22 |
| கனகா பாலன் | 28 |
| ஆனந்த குமார் | 28 |
| சா.கா. பாரதி ராஜா | 49 |
| கி.சரஸ்வதி | 51 |
| அன்புத்தோழி ஜெயஸ்ரீ | 55 |
| தசாமி | 58 |
| வீரசோழன். திருமாவளவன் | 64 |
| செ.புனிதஜோதி | 64 |
| கிரேஸ் பிரதிபா | 68 |

கடைசிப் பக்கம்

| | |
|---|---|
| இந்திரா பார்த்தசாரதி | 70 |


**வணக்கம்**

கணையாழி தற்போது மின்னிதழாக மட்டும் வெளிவந்து கொண்டிருக்கிறது. அன்புகூர்ந்து **www.kanaiyazhi.com** அல்லது **magzter.com** பாருங்கள்..

அச்சு இதழாக வரும் வாய்ப்பு இப்போது இல்லை உங்கள் சந்தாவை மின்னிழுக்கானதாக மாற்றலாம் அல்லது மீதித் தொகையைத் திருப்பி அனுப்பலாம். உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தி உதவுங்கள்.. நன்றி.



சிறுகதை

வாசுதேவன் அருணாசலம்

# அடங் ... கொங்காங்கோஸ்!!!

“வேண்டாம்! சொன்னா கேளுங்க! வாட்ஸ்அப் குரூப்பெல்லாம் வேணாம்! போன் இருக்கு! கூப்பிட்டுச் சொல்லிக்கலாம். மரியாதையாகவும் இருக்கும்! அப்படிக் கூப்பிட்டு சொன்னா எல்லோருமே வருவாங்க! ஏதோ நாம நேர்லயே வந்து கூப்பிடுற மாதிரி இருக்கும். இந்த வாட்ஸ்அப் குரூப் தயவுசெய்து வேணாம். நிம்மதி போயிடும். கண்டதையும் போட்டு செல்போனையே நெறச்சிடுவாங்க. வேண்டாம். வேண்டவே வேண்டாம்” என்றார் வக்கீல் ராமானுஜம். “அட்மின் ஒன்லி” இருக்கே! அதை எனேபிள் பண்ணியாச்சுனா... பிரச்சனையே கிடையாது! அஸ் சிம்பிள் அஸ் தெட்” என்றார் டாக்டர் வரதராஜன். “அட்மின் ஒன்லி இருக்குங்க சார். அதை யூஸ் பண்ணிணா, அது வேறமாதிரியா போயிடும். இந்த குரூப்பில் நீங்க சேர்க்க நினைக்கிறதெல்லாம் அவங்கவங்க துறையில் பெரிய ஆளுக. அத மறந்திடாதிங்க. அப்படி ஒரு குரூப்பில் அட்மின் ஒன்லினு போட்டு நீங்க வேணும்னாலும் ஆட்கள சேர்த்துப்பாருங்க... ஒருத்தரும் இருக்க மாட்டாங்க. பூராம்.... லெஃப்ட்.... லெஃப்ட்னு குரூப்பே காலியாகிடும்” என்றார் ஆடிட்டர் கிருஷ்ணசாமி. ”கிருஷ் சொல்லுறது சரிதான், வரது. அவுங்கள நாம் கண்ட்ரோல் இல்லாத ஆட்களாக நினைச்சுத்தான் இப்படி அட்மின் ஒன்லினு போட்டிருக்கோம்னு.... ஒண்ணு லெஃப்ட் ஆயிடுவாங்க.... இல்லனா ..... எதிலும் பார்ட்டிசிபேட் பண்ணாம இன்ஆக்டிவா இருப்பாங்க..... அவுங்க இருக்கிறதும் ஒண்ணுதான் இல்லாமல் இருக்கிறதும் ஒண்ணுதான்” என்று கிருஷ்ணசாமி பக்கம் பேசினார் அங்கிருந்தவர்கள் அனைவரையும்விட வயதில் மூத்தவர், பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர் வெங்கட்ராமன். (வாசகர்: ஆமா! இவங்கெல்லாம் யாரு? எதுக்கு வாட்ஸ்அப் குரூப்?) “ராமானுஜம்... நீ சொல்லுறது சரிதான். பிரச்சனை இருக்கும்தான். ஆனா இப்ப வாட்ஸ் அப் குரூப் மாதிரி ஒரு சோஷியல் நெட்வொர்க் இல்லாட்டி எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இன்போ எல்லாம் கஷ்டமப்பா. உடனே ஒரு விசயத்தைக் கொண்டுபோய்ச் சேர்க்க முடியாது. பிரச்சனையில்லாம இருக்கமுடியாது. எல்லாம் படிச்சவங்க. பிரச்சனை

கட்டாயம் இருக்கும். எல்லாத்தையும் சமாளிச்சுக்கலாம். ஸ்டார்ட் பண்ணிடுவோம். நீயே தொடங்கு" என்றார், இப்படி ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று பிடிவாதமாக இருந்த மதுரை மாவட்ட வர்த்தகச் சங்கத் தலைவர் மணிவண்ணன், ரியல் எஸ்டேட் கிங். "இல்லீங்க அண்ணே.... நீங்களே ஸ்டார்ட் பண்ணுங்க... எதுவந்தாலும் பார்ப்போம்... சமாளிப்போம்" என்றார் ராமானுஜம். (வாசகர்: இந்தா பாரு.... இப்ப சொல்லப்போறீயா... இல்லையா.... உனக்கு மரியாதை அவ்வளவுதான்.... இவங்கெல்லாம் யாரு? முதல்ல அதச் சொல்லித் தொலை!) "ராமனுஜம்.... நா பா -வை எனக்கு ரொம்ப பிடிக்கும். ஜே.ஜே.வின் சில குறிப்புகளைவிட எனக்கு பிடிச்சது "ஒரு புளியமரத்தின் கதை." நல்ல எதார்த்தம். வாசிக்க ஆரம்பிச்ச சில வினாடிகளிலேயே நாவலுக்குள்ளே நாம போயிடுவோம். அப்படி ஒரு கதை அது. செல்லத்தாயி நல்ல படைப்பு. நா பா வோட சிறுகதைகள் என்னவோ எனக்கு கொஞ்சம் பிடிக்கலதான்... எல்லாத்தையும் சொல்ல மாட்டேன்.... அதுவும் அந்த "கிடரி," "தற்கொலை," "எங்கள் டிச்சர்" ஒண்ணுமேயில்லாத மாதிரியிருக்கும், ஆனா கொஞ்சம் டீப்பா பார்த்தோம்னா நிறைய விசயம் இருக்கும்... "கொந்தளிப்பு" மாதிரி ஒரு கதை எழுத முடியுமா என்ன! நா பா-வின் பார்வை அத்தனையும் நமக்கு வந்திடாது. அப்படி பார்க்கவும் முடியாது. சுருக்கமா... நல்ல ஒரு எழுத்தாளர்... நம்ம ஜெனரேஷனுக்குக் கொஞ்சம் நெருக்கமானவரு. இப்ப இருக்கிற தலைமுறைக்கு அவர பத்தி நிறைய தெரிய மாட்டேங்குது. அதுனாலதான் சொன்னேன். இலக்கிய மன்றங்கள்.... இலக்கிய விழாக்கள்... இலக்கிய நிகழ்வுகள்னு அவரைப்பற்றி தொடர்ந்து செய்யற மாதிரி ஒரு அமைப்பு இருக்கணும். இதைப் பயன்படுத்திச் சல்லிக்காசுகூடச் சம்பாதிக்க நினைக்காத ஆட்களா சேர்த்து ஒரு குரூப் அமைச்சு நல்ல ஒரு இலக்கியப் பணி செஞ்சிடணும். வேற ஒண்ணுமில்லை!" என்று முடித்தார் மணிவண்ணன். (வாசகர்: அடப்பாவிங்களா... சு ரா-வோட கதைகளை நா பா-வோடதுனு சொல்லுறானுங்க...இதுக்குதானா இந்தக் கிறுக்குப்பயலுக குரூப் ஆரம்பிக்கிறாங்க!... ஒரு நிமிஷம்... என்னது இது... இவிங்கள உண்மையான ஆட்களுனு நம்பிட்டோம்.... கதாசிரியரோட .... தப்பா.... ) "ஏண்ணே! நீங்க யாரைப்பத்திப் பேசுறீங்க.... சு ராவா... நா பாவா ..." என்றார் ராமானுஜம். "ம்... ம்... ம்... ....ஸாரிடா! கொஞ்சம் குழம்பிட்டேன். நா பா-தான்" என்று அசடு வழிந்து நின்றார் மணிவண்ணன். "நீங்க சொன்ன ஸ்டோரிகள் எல்லாமே சுரா எழுதியதுதானே!" என்றார் ராமானுஜம். "சரிடா அதவிடு... நா பா-தான். நம்ம மதுரக்காரர். சுரா-வுக்கு நாகர்கோவில்... அவர அப்புறம் பார்த்துக்கலாம்.. இல்லைனாலும்... அவருக்கு ஆட்கள் இருக்காங்க... கன்னியகுமாரியிலிருந்து கலிஃபோர்னியா வரையிலும்... (வாசகர்: நாகர்கோவிலிருந்து நையாகரா வரையிலும்னு சொன்னாலும் நல்லாத்தானிருக்கும்!) "அவங்க பாத்துக்குவாங்க... நம்ம ஆளை ப்ரோமோட் பண்ணணும். அதுதான் முக்கியம். என்ன நான் சொல்லுறது" என்று அங்கிருந்த அனைவரையும் ஒரு பார்வையில் அளந்தார் மணிவண்ணன். (வாசகர்: படிச்சது சுரா... குரூப் நா பா-வுக்கு... விளங்கும்டா!)

வரதராஜன், கிருஷ்ணசாமி, வெங்கட்ராமன் அனைவரும் ஒரு பெருமூச்சுவிட்டு மணிவண்ணனையே கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டே இருந்தனர். கிருஷ்ணசாமி ஆரம்பித்தார், "மணிவண்ணன் சார், ஒரு நிமிஷம் எல்லாம் ஆடிப்போயிட்டோம். பேர

மாத்தி சொல்லிட்டீங்க... ஒரு மாதிரி ஆயிட்டோம். நமக்கு இப்ப வேண்டியது நா பா-தான். நீங்க சொன்னமாதிரி... அவர் நம்ம ஆளு! நம்ம ஊர்க்காரர்!" "சரி! அடுத்து குரூப்புக்கு நல்ல பேரா ஒண்ணு வைக்கணும். அதைப்பத்தி பேசுவோம்" என்றார் கிருஷ்ணசாமி. "நா பா நண்பர்கள்... எப்படி இருக்கு!" என்றார் வெங்கட்ராமன். (வாசகர்: பேரு வைக்கிறாங்க பாரு!) "இன்னும் கொஞ்சம் ஹைடெக்கா இருக்கணும்" என்றார் டாக்டர் வரதராஜன் உடம்பை ஒரு உலுக்கு உலுக்கி. சட்டென்று "நா பா புரோமோட்டர்ஸ்" என்றார் மணிவண்ணன். (வாசகர்: உன்னோட ரியல் எஸ்டேட் புத்தி உன்னவிட்டு போகுதானுபாரு!). "நா பா இலக்கியப் பணி ... இது எப்படி இருக்கு" என்றார் ராமானுஜம். "நல்லா இருக்கு ... நா பா இலக்கியத் தொண்டுனு இருந்தா?" என்றார் கிருஷ்ணசாமி. இறுதியில் வெங்கட்ராமன் தந்த பெயரை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். (வாசகர்: என்ன பேரு?)" இந்தா பாருங்கப்பா பெரிய பெரிய ஆட்கள பிடிச்சுப் போடணும். குரூப் நல்ல கெத்தா இருக்கணும்" என்று அனைவரையும் எச்சரிப்பதுபோல் சொன்னார் வெங்கட்ராமன். "ஏண்ணே குரூப்புக்கு பெண்கள் வேணுமா என்ன?" என்றார் ராமானுஜம். "இந்தா பாரு! நா பா-வுக்கு பெண் ரசிகர்கள்தான் அதிகம். கட்டாயம் நல்ல நிலையில் இருக்கிற நல்லா படிச்ச பெண்களாகப் பார்த்து, காலேஜில், யுனிவர்சிட்டியில் ப்ரொஃபஸரா இருப்பாங்க, அவங்கள உறுப்பினராகக் கட்டாயம் சேர்த்திடணும். புரிஞ்சதா? வேணும்னா நான் புடிச்சுத்தர்றேன்" என்றார் வெங்கட்ராமன். (வாசகர்: பேசுறானுக பாரு... புடிச்சுத்தர்றேன் கிடிச்சுத்தர்றேனுக்கிட்டு). "எல்லாம் சிறப்பா செஞ்சிடுவோம்ண்ணே! கவலையே வேண்டாம்!" என்றார் ராமானுஜம்.

"நா பா நண்பர் – இலக்கிய வட்டம்" என்று பெயரிடப்பட்டு வாட்ஸ் அப் குரூப் உருவாக்கப்பட்டது. இந்த ஐவரும் – ராமானுஜம், வரதராஜன், கிருஷ்ணசாமி, வெங்கட்ராமன், மணிவண்ணன் - குரூப்பின் அட்மின்களானார்கள். ஒவ்வொருவரும் அவர்களுக்குத் தெரிந்த பெரிய பெரிய ஆட்களைச் சேர்த்தனர். வெங்கட்ராமன் கிட்டத்தட்ட 17 பெண் பேராசிரியர்களை குரூப்பில் சேர்த்துவிட்டார். (வாசகர்: பிடிச்சுப் போட்டுட்டாருனு சொல்லுங்க, சார்) மொத்தம் குரூப்பில் 216 உறுப்பினர்கள் இருந்தனர். வேறுவேறு துறையைச் சார்ந்த பெரிய பெரிய பொறுப்புகளிலிருப்பவர்கள் குரூப்பில் இணைந்தனர். தன்னை எப்படியாவது ஒரு இலக்கியவாதியாக... அல்லது இலக்கியத்திற்கும் தமக்கும் யாரும் அறியா ஓர் உறவு இருக்கிறது என்பதை அம்பலப்படுத்தும் விதமாக இந்தக் குரூப்பில் சேர்ந்தவர்கள் அதிகம். அனைவரும் அட்மின்களாக்கப்பட்டனர். முதலில் ஐவர் குழு அட்மின்கள் மட்டும் எந்தவித தயக்கமின்றி அவரவருக்கு முக்கியம் என்று தோன்றிய அனைத்து பதிவுகளையும், புகைப்படங்கள், காணொலிகள், மீம்ஸ் முதற்கொண்டு குரூப்பில் பதிவிட்டப்பட்டன. முதலில் ஒருவருக்கொருவர் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொண்டார்கள். (வாசகர்: முதல்ல அப்படித்தான் இருக்கும். அப்புறம் போகப்போக...) பதிவுகள் பிடிக்கவில்லையென்றாலும், பாராட்டு தெரிவிக்கும் ஸ்மைலிகளை, முத்திரைகளைப் பதிவிட்டு பொறுமைகாத்து வந்தார்கள். கொஞ்ச நாட்களில் அனைவரும் "படித்ததில் பிடித்தது," "ஐந்து முறை படித்துவிட்டேன்," "எட்டு முறை பார்த்துவிட்டேன்" என்று தலைப்பில் பல பதிவுகள் வந்தவண்ணம் இருந்தன. நா பா பற்றிய செய்திகளைத் தவிர. மணிவண்ணன் இதற்கு ஒரு முற்றுப்புள்ளியிட்டு, குரூப்

தொடங்கப்பட்டதன் நோக்கத்தை முன்னெடுத்து நகரவேண்டும் என்று ஆதங்கப்பட்டாரே தவிர, யாரிடமும் வெளிப்படையாகக் கூறமுடியவில்லை. (வாசகர்: பெரிய பெரிய ஆட்களைச் சேர்த்தா இதுதான் நடக்கும்.)

ஜனவரி 25 என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. துணைவியுடன் வாய்ச் சண்டை போட்ட அடுத்த நிமிடம் அந்த முடிவை எடுத்தார் மணிவண்ணன். இரவு 10. 30 மணிக்கு ராமானுஜத்தை அழைத்தார். "ஏங்க! என்னங்க இது! குரூப் இப்படி போயிட்டு இருக்கு! எதுக்கு இந்த குரூப்பைத் தொடங்கினோம்! என்ன பண்ணிக்கிட்டு இருக்கோம்! குரூப்புக்குள்ள நிறைய குரூப்புகள் வந்திருச்சுங்க! கிருஷ்ணசாமி அவருக்குன்னு ஒரு குரூப் வச்சிருக்கிறார். வேணாலும் பாருங்க!அவர் பதிவு போட்ட உடனே அந்த அஞ்சு பேரும் பதிவு போட்டு கிருஷ்ணசாமிய தூக்கு தூக்குனு தூக்குறானுக! இந்த வெட்கங்கெட்ட வெங்கட் சார்.... பொம்பளைங்க பதிவு எப்படா போடுவாங்கனு பாத்துக்கிட்டே இருக்கிறது.... போட்ட உடனே! அது சூப்பரு! இது சூப்பருன்னு! வயசுக்கு தகுந்த மாதிரியா ஸ்மைலி போடுறாறு. கண்ணா பிண்ணானு... ஏதோ இளமை திரும்புதுன்னு நினைப்பு! அன்னைக்கு பார்த்தா அவரு சம்சாரம் போன் பண்ணி யாருங்க அது சாருமதினு எங்கிட்ட கேட்கிறாங்க! என்னத்தையோ சொல்லிச் சமாளிச்சேன்! இவருக்கு எதுக்கு இதெல்லாம்! (வாசகர்: இதெல்லாம் சகஜமப்பா!) "உண்மைய சொல்லணும்னா! டாக்டர் பரவாயில்லை! ஏதோ அப்பப்ப மெடிக்கல் வீடியோஸ் கொஞ்சம் போடுறாரு! உண்மையிலேயே பயனுள்ளதாத்தான் இருக்கு! இருந்தாலும், நம்ம குரூப்போட நோக்கம் அது இல்லையே!... என்ன பண்ணுறதுனுதான் தெரியலீங்க! நீங்களும் நானும் மட்டும்தான் முகத்தாட்சண்யத்திற்குப் போடுற பதிவுக்கு பதில் மட்டும் போட்டுட்டு அப்பப்ப நா பா-வைப்பத்தி செய்தி போடுறோம்... ராமானுஜம்! லைன்ல இருக்கீங்களா? என்று புலம்பித்தீர்த்தார் மணிவண்ணன். "சார் கேட்டுக்கிட்டுதான் இருக்கேன். என்ன செய்றதுன்னுதான் தெரியல? நானும் யோசிச்சிக்கிட்டுதான் இருக்கேன்" என்றார் ராமானுஜம். "நா வேணும்னா! குரூப்பில் இப்படி ஒரு பதிவ போட்டு விடட்டுமாங்க சார்? "நா பா பற்றிய செய்திகளைத் தவிர வேறு செய்திகளை இங்கே பதிவிடுவதைத் தவிர்க்கவும்" என்றார் மணிவண்ணன். (வாசகர்: ப்ளீஸ் ட்ரெய் அண்டு சீ வாட் ஹேப்பன்ஸ்!) "முயற்சி பண்ணிப் பார்ப்போங்க சார். போடுங்க சார்" என்று உணர்ச்சி பொங்க கூறினார் ராமானுஜம். "இப்பவே போட்டு விடுகிறேன்" என்று அழைப்பைத் துண்டித்தார். வாட்ஸ்அப் குரூப்பை திறந்து ராமானுஜத்திடம் கூறியது போலவே "நா பா பற்றிய செய்திகளைத் தவிர வேறு செய்திகளை இங்கே பதிவிடுவதைத் தவிர்க்கவும்" என்று பதிவிட்டார். பதிவிட்டதை குரூப்பிலிருந்து 216 பேரில் உடனடியாக பார்த்த 46 பேரில் கிருஷ்ணாசாமியும், வெங்கட்ராமனும் அடக்கம். ஆனால் அந்தப் பதிவினை ஆமோதித்தோ


**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.


**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

ஆட்சேபனை தெரிவித்தோ எந்த பதிவையும் யாரும் போடவில்லை. மணிவண்ணன் வாட்ஸ்அப்பில் இரவு 11.30 மணிவரைக்கும் பார்த்துவிட்டு படுக்கச் சென்றுவிட்டார். நெட்வொர்கை வேண்டுமென்றே துண்டிக்கவில்லை. வாட்ஸ்அப் நோட்டிஃபிகேஷன் ஏதாவது வந்தால் பார்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால் அப்படிச் செய்திருந்தார். சரியாக 12.01க்கு "குடியரசு தின நல்வாழ்த்துகள்" என்று டாக்டர் வரதராஜன் பதிவிட்டார். என்ன செய்வது என்று தெரியாமல் மணிவண்ணன் யோசித்துக்கொண்டே தூங்கிவிட்டார்.

காலையில் எழுந்து வாட்ஸ் அப்பை திறந்தார். 196 பதிவுகள் (வாசகர்: அது! மணிவண்ணன் இப்ப என்ன பண்ணப்போறீங்க!) விதவிதமாக... கலர்கலராக... புகைப்படங்கள்... வாணவேடிக்கை நிகழ்ந்து மிளிரும் குடியரசுதின நல்வாழ்த்துகளைக் தெறிக்கவிடும் காணொலிக் காட்சிகள்... குழந்தைகளின் குடியரசு தின வாழ்த்துகள்.... நடிகர்களின் வாழ்த்துகள்... நடிகைகளின் வாழ்த்துகள்... அரசியல்வாதிகளின் வாழ்த்துகள்.... அதிகாரிகளின் வாழ்த்துகள்... தனிச்சிறப்பு பெற மெனக்கெட்டு தயாரிக்கப்பட்ட புகைப்படங்கள்... காணொலிகள்.... மணிவண்ணன் அனைத்தையும் ஆற அமர இரவு 11.30 மணிவரைக்கும் பார்த்துத் தீர்த்தார்.... அந்தக் குரூப்பில் குடியரசு தின வாழ்த்துகளை தெரிவிக்காதவர்கள் இருவர் மட்டுமே. (வாசகர்: புரியுது!) மணிவண்ணன். ராமானுஜம். நாட்டுப்பற்று இல்லாதவர்கள் என்று தங்களை யாரும் நினைத்துவிடுவார்களோ என்ற அச்சம்கூட அவர்கள் மனதில் தோன்றியது. இரவு 11.58-க்கு பல்கலைக்கழகப் பேராசிரியர் சாருமதி தன் மகனுடன் மதுரை ஆரப்பாளையத்தில் பிரதான சிக்னலின் மையப்பகுதியிலிருக்கும் ஒரு சுதந்திரவீரரின் சிலைக்கு மாலை அணிவித்த புகைப்படக் காட்சியை, குரூப்பில் பதிவிட்டிருந்தார். பதிவிட்ட அடுத்த நிமிடம் வெங்கட்ராமன் ஓர் ஒன்பது 'சூப்பர்' முத்திரையையும், பதினெட்டு 'கைத்தட்டல்' முத்திரையையும், ஒன்பது 'பூங்கொத்து' முத்திரையையும், பதிவிட்டிருந்தார். இதைப் பார்த்த மணிவண்ணனுக்கு உச்சி மண்டையில் முடி நட்டுக்கொண்டு நின்றது. (வாசகர்: என்ன மொழிடா இது! கொங்காங்கோஸ்!) சாருமதி பதிவிட்ட புகைப்படத்தை அழுத்தி பதில் பதிவிட்டார் "நா பா செய்திகளைத் தவிர வேற பதிவுகளை இங்கே பதிவிடுவதைத் தவிர்க்கவும்." "பல நாட்களுக்குப்பின் இன்றுதான் நான் ஒரு பதிவை போடுகிறேன். அதுவும் ஒரு தியாகியின் படம். நாட்டிற்கு சுதந்திரம் பெற அரும்பாடுபட்டவர் அவர். அவர்வழி வந்தவர்கள் நாங்கள். இன்று அதை நினைவுகூராமல் வேறெந்த நாளில் நினைவுகூர முடியும்?" என்று சாருமதி பதிலளித்திருந்தார். ராமானுஜம் உடனடியாக ஒரு பதிவைப் போட்டார் "இந்தக் குரூப் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தைத் தங்களின் பதிவு மதிக்கவில்லை என்பதை மறக்க வேண்டாம்." "நா பா இருந்திருந்தால் நான் போட்ட பதிவை வரவேற்றிருப்பார். அவருடைய கதைகள் சுதந்திர தாகம்கொண்ட பாத்திரங்கள் நிறைந்தவை. கட்டாயம் இந்தப் பதிவை அவர் வரவேற்பார். சரி... இனிமேல் நான் இதுபோன்ற பதிவுகளைத் தவிர்த்துவிடுகிறேன். என்னை கரெக்ட் செய்ததுபோல் எல்லோரையும் நீங்கள் கரெக்ட் செய்தீர்கள் என்றால் உங்களின் நேர்மையையும் வீரத்தையும் நான் பாராட்டுவேன்" என்று முடித்திருந்தார் சாருமதி. (வாசகர்: இது தேவையா!) மணிவண்ணனும் ராமானுஜமும் சாருமதியின் கடைசி வேண்டுகோளை



சற்றும் எதிர்பார்க்கவில்லை. என்ன செய்வதென்று தெரியவில்லை. இருந்தாலும் மணிவண்ணன் பதிவிட்டார், “மேடம் உங்களின் கருத்துக்கு நன்றி! கட்டாயம் நேர்மையாகவும் வீரமாகவும் நடந்து வந்திருக்கிறோம்... நடந்தும் கொள்வோம். நன்றி!”

போட்ட அடுத்த நிமிடத்தில் வெங்கட்ராமன் வாட்ஸ்அப் உள்ளே நுழைந்தார். “அன்ஃபேர் அண்டு அட்ராசியஸ்!” என்று ஒரு கோபக்கண்களோடு இருக்கும் ஒரு முத்திரையையும் சேர்த்து பதிவிட்டிருந்தார். சிறிது நேரத்தில் போடப்பட்ட பதிவை அழித்துவிட்டார். (வாசகர்: எப்படி?) வெங்கட்ராமனின் ஆக்ரோஷப் பதிவை சாருமதியின் பதிவோடு ஸ்கிரீன்ஷாட் எடுத்து வெங்கட்ராமனுக்கே அனுப்பி, அதை அவருடைய துணைவியாருக்கு “ஃபார்வேடு செய்யட்டுமா” என்று மணிவண்ணன் கேட்டார். (வாசகர்: அன்ஃபேர் அண்டு அட்ராசியஸ்!) போட்ட பதிவு உடனடியாக அழிக்கப்பட்டுவிட்டது. இரண்டு நாட்கள் எந்தப் பதிவுமின்றி குரூப் சத்தமில்லாமல் சென்றது. மணிவண்ணனும் ராமானுஜனும்தான் நா பா-வின் படைப்புகள், வாழ்க்கைக் குறிப்புகள் பற்றிய செய்திகளைப் பதிவிட்டு வந்தனர். போடும் பதிவுகளுக்கு ஆறுதலாக ஒரு கைத்தட்டு முத்திரைகூட கிடைக்கவில்லை. மூன்றாம்நாள் பிரபல தொலைக்காட்சியின் விவாத நிகழ்ச்சியின் புகழ்பெற்ற உறுப்பினர் அவருடைய நிகழ்ச்சி அன்று மாலை ஏழு மணிக்கு தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிறது என்ற செய்தியைப் பதிவிட்டார். (வாசகர்: சிக்கிட்டாங்கடா! சின்னப்பதாஸுக!) அந்த உறுப்பினர் தயவில்தான் இந்த குரூப் பல திட்டங்களை தீட்டி வைத்திருக்கின்றது. “இந்த நேரத்தில்தான் இந்த ஆள் இதைப்போட வேண்டுமா” என்று உள்ளூறப் புழுங்கிக் கொண்டிருந்தார் மணிவண்ணன். என்ன செய்வது என்று தெரியாமல் முழித்துக் கொண்டிருந்தபோது, “சாருமதி டைப்பிங் செய்வது வாட்ஸ்அப் ஹெட்டரில் தெரிந்தது.... வெங்கட்ராமன் டைப்பிங் செய்வதும் தெரிந்தது. மணிவண்ணனுக்கு அடிவயிறு கலங்குவது போலிருந்தது. (வாசகர்: அப்புறம் எப்படியிருக்கும்!) அவர்கள் பதில் போடுவதற்குமுன் முந்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மட்டும் மணிவண்ணனுக்குள் ஓடிக்கொண்டிருந்தது. இருந்தாலும் குரூப்பின் தலையெழுத்தே அந்தத் தொலைக்காட்சி பிரபலத்தை நம்பித்தானே இருக்கிறது என்ற அடிமனதின் அழுத்தம் கொஞ்சமும் குறையவில்லை. இப்படி யோசித்துக் கொண்டிருக்கையில் அந்தத் தொலைகாட்சிப் பிரபலம் போட்ட பதிவு

அவராலேயே அழிக்கப்பட்டது. (வாசகர்: இது எப்படி?) அடுத்த வினாடி மணிவண்ணனின் கைபேசி அலறியது. ராமானுஜம். "அண்ணே! தப்பிச்சோம்ண்ணே! நான்தான் அவரக் கூப்பிட்டு காலில்விழாத குறையா கெஞ்சி அவர் போட்ட பதிவை அழிக்கச் சொன்னேன். பரவாயில்லீங்கண்ணே! அவரும் சொன்ன உடனேயே புரிஞ்சுகிட்டார். டெலீட் பண்ணிட்டார்ண்ணே! பெரிய மனுஷங்க பெரிய மனுஷங்கதான்ணே" என்றார் ராமானுஜம். "நம்ம திட்டமெல்லாம் தவிடுபொடியாகிவிட்டதே! எந்த மூஞ்சிய வெச்சுக்கிட்டு இத செஞ்சு கொடுங்க அத செஞ்சு கொடுங்கன்னு அந்த ஆளைக் கேட்பது? இப்படி பண்ணிப்போட்டானே ராமானுஜம். அந்த ஆள் கட்டாயம் குரூப்பைவிட்டு லெஃப்ட்டாயிருவாரு!" என்ற மனவோட்டத்தோடே ராமானுஜத்துடன் பேசிக்கொண்டிருந்தார் மணிவண்ணன். (வாசகர்: லெஃப்டாகாம? வேடிக்கையா பார்ப்பாரு! கொங்காங்கோஸ்!)"சார், பேசாம இந்த ப்ராஜெக்ட்டை விட்டுவிடுவோமா? ஒண்ணும் முடியல! ஆளுக்கு ஒரு பக்கம் இழுக்குறாங்க...நம்மால முடியல..."என்று மணிவண்ணன் நொந்து கொண்டிருக்கும்போது "அண்ணே! என்னதுண்ணே இது! அவர் குரூப்பைவிட்டு லெஃப்டாயிட்டாருண்ணே!" என்று அதிர்ந்து மணிவண்ணனிடம் தெரிவித்தார் ராமானுஜம். (வாசகர்: சொன்னோம்ல!) "நாசமா போச்சு! ... வேற என்ன நடக்கும்!" மணிவண்ணனின் மனதில் உதித்த வார்த்தைகள் வெளியே வரவில்லை. "அட விடுங்க சார். இவங்களையெல்லாம் நம்பித்தான் நாம இருக்கோமா! ஏன்! டிவியில் வந்தாத்தான் நா பா-வை ப்ரோமோட் பண்ண முடியுமா! இன்னும் எத்தனையோ வழிகள்! (வாசகர்: ஆத்தாடி! என்னமா நடிக்கிறான்டா!) "முதலில் இந்தக் கண்டத கடியதை குரூப்பில் போடுவதை நிறுத்தணும். முதல் வேலை அதுதான். நல்லா யோசிச்சு ஒரு முடிவெடுப்போம். நாளைக்கு ஃப்ரீயா இருந்தா கூப்பிடுங்க!" என்று கூறி கைபேசி அழைப்பைத் துண்டித்தார் மணிவண்ணன்.

அன்று மாலை முழுவதும் ஒருவித சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தார் மணிவண்ணன். இரவும் சரியாகத் தூங்கவில்லை. அதிகாலையிலேயே எழுந்திருந்தார். அவரது துணைவியார் அலமேலு அறைக்குள் காப்பித் தம்ளரோடு உள்ளே நுழைந்தாள். (வாசகர்: பெண் கேரக்டர்னா 'அவ' 'இவ'. அதேது ஆண் கேரக்டர்னா 'அவரு' 'இவரு' நல்லா எழுதுறீங்கடா... கதை!) "ஏங்க! மதுரைவீரன் கோயிலுக்கு இன்னைக்கு வேணும்னா போயிட்டு வந்திடுவோமா? என்று குரல் நடுங்க கேட்டாள். "ஏன்! திடீர்னு! அங்க போகனும்கிற!" என்றார் மணிவண்ணன் காப்பித் தம்ளரை வாங்கிக்கொண்டே! "இல்ல... நேத்திலேருந்தே நீங்க ஒரு மாதிரியா இருக்கீங்களேனுதான் அப்படிச் சொன்னேன்!" என்றாள் அலமேலு. "ஒரு மாதிரியானா?" என்று சற்று உரத்த குரலில் காப்பித் தம்ளரிலிருந்து காப்பியை உறிஞ்சியபடியே கேட்டார். (வாசகர்: அதுதான் பேய் பிசாசு எதுவும் பிடிச்சிருச்சானு!)"சாப்பிட்ட தட்ட யாராவது குப்பக்கூடையில போடுவாங்களா?" என்றார் அலமேலு. "ஏன்! என்னாச்சு!" தான் ஏதோ ஒரு கிறுக்குத்தனம் செய்திருக்கிறோமோ என்ற சந்தேகத்துடன் வினவினார் மணிவண்ணன். "ஆமாங்க! நேத்து ராத்திரி சாப்பிட்ட தட்ட எடுத்துக்கொண்டுபோய் குப்பக் கூடையில போட்டுட்டு மென்னு துப்பிவைத்திருந்த முருங்கக்காய் கறிவேப்பிலை, தக்காளித் தோலையெல்லாம் தட்டு கழுவுற இடத்தில போட்டுட்டு போயிட்டீங்க!"

என்றாள் அலமேலு. (வாசகர்: அடங்... கொங்காங்கோஸ்!) மணிவண்ணனுக்கு அப்போதுதான் தான் என்ன செய்திருக்கிறோம் என்ற தெளிவு பிறந்தது. தட்டிலிருந்து வேண்டாதவற்றை குப்பைக்கூடையில் போட்டுவிட்டு தட்டை கழுவுமிடத்தில் போடுவதற்குப் பதில், தட்டை குப்பைக்கூடையில் போட்டுவிட்டு வேண்டாதவற்றை கழுவுமிடத்தில் போட்டுவிட்டு கையைக் கழுவி நழுவி இருக்கிறார் என்பதை உணர்ந்தார். (வாசகர்: 'கழுவி' 'நழுவி' நல்லாயிருக்கு!) "என்ன மடத்தனம் இது! நல்ல புத்தி இருக்கிற யாராவது இதைச் செய்வாங்களா" என்று தன்னைத்தானே நொந்து கொண்டார். (வாசகர்: என்ன பெரிய சுயமரியாதை வேண்டிக்கிடக்கு! "செய்வானா"னு எழுதணும்!) "நேத்து ஏதோ ஒரு ஞாபகத்தில் அப்படிச் செய்துவிட்டேன்!" என்று அலமேலுவிடம் கூறி சமாளித்தார்.

வாட்ஸ்அப்பைத் திறந்தார். பன்னிரண்டு பதிவுகள். ஒன்றுகூட நா பா பற்றியோ குரூப்பின் நடவடிக்கைகள் பற்றியோ இல்லை. மணிவண்ணனுக்கு உடம்பின் உஷ்ணம் அதிகரிப்பதுபோல் ஆனது. "என்னத்த நினைச்சு இந்த குரூப்பில் இவ்வளவ கொண்டுவந்து கொட்டுறானுங்க!" (வாசகர்: அய்யா! இந்த உலகத்துக்கு அட்ராக்ஷன் டெஃபிஷியன்ஸி சின்ரோம் பிடிச்சிருக்கு! சிம்பிளா இதுதான்! "தோன்றின் புகழோடு தோன்றுக சின்ரோம்! அவ்வளவுதான். இதுதான் இப்பப் பிரச்சனை!") "இது என்ன குப்பைத்தொட்டியா? இப்படி கண்டது கடியதுனு கொட்றதுக்கு!" என்று நினைத்துக்கொண்டிருக்கும் தருணத்தில்தான் அது தோன்றியது.

குரூப்பின் பெயரை மாற்றினார் மணிவண்ணன். 'நா பா நண்பர்கள் இலக்கிய வட்டக் குப்பைத்தொட்டி.' (வாசகர்: "இப்பப் போடுங்கடா உங்க பதிவுகள! கொங்காங்கோஸ்!) குரூப்பின் பெயர் மாற்றப்பட்டபின் யாரும் எந்தப் பதிவையும் அந்தக் குரூப்பில் பதிவிடவில்லை. மணிவண்ணன் மட்டும்தான் அவ்வப்போது குப்பைத்தொட்டியில் சாப்பாட்டுத் தட்டைப் போட்டுவந்தார். (வாசகர்: அடங்... கொங்காங்கோஸ்! இப்படி முடிச்சிட்டியா!!!)

vasuaruntamil@gmail.com ■